**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்: 84** **நாள்: 16.06.2018**

**சென்னை சீர்மிகு நகர த்திட்டத்தின் கீழ் தியாகராய நகரில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

சென்னை சீர்மிகு நகரத் திட்டத்தின் பகுதி சார்ந்த வளர்ச்சி திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கோடம்பாக்கம் மண்டலம், தியாகராய நகரில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., அவர்கள் 15.06.2018 அன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் ரூ.1366 கோடி மதிப்பீட்டில் தியாகராய நகரை மேம்படுத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தணிகாசலம் சாலையில் பல அடுக்கு வாகன நிறுத்தம் அமைக்கும் பணி, எல்.இ.டி விளக்குகள் அமைக்கும் பணி, தியாகராய சாலையில் பாதசாரிகள் நடைபாதை வளாகம் அமைக்கும் பணி, பாதசாரிகளுக்கான நடைபாதை பணிகள், பூங்காக்கள் மறுசீரமைப்புத் திட்டப்பணி, மழைநீர் வடிகால்களை மேம்படுத்தும் பணி, சென்னை பள்ளிகளில் வள வகுப்பறை அமைக்கும் பணி ஆகியவை தியாகராய நகரில் நிறைவேற்றப்பட்டு வரும் முக்கிய திட்டங்கள் ஆகும்.

தியாகராய நகர் தணிகாச்சலம் சாலையில் உள்ள பல அடுக்கு வாகன நிறுத்தம் அமைக்கும் பணி, லோடிகான் தெரு மற்றும் இராமன் தெருவில் நடைபாதை பணிகள், ஜி.என். செட்டி சாலையில் உள்ள ஜீவா பூங்கா மறுசீரமைப்பு பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது, நடைபெற்று வரும் பணிகளின் தன்மையை கேட்டறிந்து, பணிகளை உயர்ந்த தரத்துடன் விரைந்து முடித்திட பல அறிவுரைகளை வழங்கினார். மேலும், இரண்டு இடங்களில் உள்ள கழிவுநீர் நுழைவு வாயில் மூடிகளை சாலையின் மேற்புற மட்டத்தில் அமைக்கவும், இதற்கு முன்னுரிமை அளித்து இப்பணியை திட்டமிட்ட காலக்கெடுவிற்குள் உடனடியாக முடிக்குமாறும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இந்த ஆய்வின் போது பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்தராவ், இ.ஆ.ப அவர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**